රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
REGISTRAR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. RG/NB/01/ சுற்றறிக்கை இல

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
HEAD OFFICE

තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. 565

ඔබේ අංකය / உமது இல. / Your No.

234/A3, ඩෙන්සිල් කොබ්බැකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
234/A3, Denzil Kobbakaduwa Mawatha, Battaramulla.


දිනය / திகதி / Date 2022.08.18

சுற்றறிக்கை இல: 12/2022

சகல காணிப் பதிவாளர்களுக்கும்,

**<u>பதிவு செய்வதற்காக ஒப்படைக்கப்படும் ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வையை செலுத்துதல்.</u>**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக என்னால் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட 2021.02.25 ஆம் திகதிய இல: 03/2021 உடைய சுற்றறிக்கை மற்றும் 2022.01.03 ஆம் திகதிய இல: 01/2022 உடைய சுற்றறிக்கையினையும் இதன் மூலம் இரத்து செய்வதோடு, 2022.08.16 ஆம் திகதியிலிருந்து மேற் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கும் என்பதனை அறிய தருகின்றேன்.

02. 1982 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை சட்டத்தின் 22 ஆவது பிரிவு மற்றும் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 31 (6), (7) பிரிவுகளுக்கு அமைவாக நொத்தாரிசு ஒருவரால் எழுதப்பட்டு உறுதிப்படுத்தப்படுகின்ற ஆவணங்களுக்கு உரிய முத்திரைத் தீர்வையை செலுத்துதல் வேண்டும். முத்திரைத் தீர்வைக்கு உட்பட்ட ஆவணம் ஒன்றிற்கு உரிய முறையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டிருக்காது விட்டால், அவ்வாறான ஓர் ஆவணத்தை பதிவு செய்வதை காணிப் பதிவாளர் நிராகரிக்க வேண்டுமென ஆவண பதிவு கட்டளைச் சட்டத்தின் 36 (2) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. இவ்வாறு அவணங்களுக்கு முத்திரைத் தீர்வையை செலுத்துவது தொடர்பாக சட்டரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பினும் சில நொத்தாரிசுமார்கள் தம்மால் எழுதி உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களின் இரண்டாம் பிரதிக்கான முத்திரைத் தீர்வையை உரிய முறையில் செலுத்துவதில்லை என எனக்கு அறியகிடைத்துள்ளது. இவ்விடயமானது அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தினை இழக்கச் செய்வதை போன்று பொது மக்களுக்கு அந்த ஆவணங்களின் பிரதிகளை வழங்கும் போது எமது திணைக்களத்திற்கு சிக்கலான நிலைமையினையும் ஏற்படுத்தியுள்ளது.

04. அதற்கமைவாக இந்த நிலமையினை மட்டுபடுத்துவதற்காக கீழ் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அறிவிக்கின்றேன்.

I. **காணி விற்பனை மற்றும் நன்கொடைகளை பதிவு செய்தல்.**

காணி விற்பனை மற்றும் நன்கொடைகளை பதிவு செய்வதற்கு ஒப்படைக்கும் பொழுது அதன் இரண்டாம் பிரதிக்கு முத்திரைத் தீர்வையை செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதி ஒன்றினை அல்லது உரிய நொத்தாரிசினால் சத்தியப் பிரதி என உறுதிப்படுத்தப்பட்ட அப்பற்றுச்சீட்டின் நகழ் பிரதி ஒன்றினை மூலப்பிரதியுடன் இணைத்து பெற்றுக் கொள்ளல்.

II. **குத்தகை மற்றும் ஈடுகளுக்கான முத்திரை தீர்வையினை செலுத்துதல்.**

a) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படும் விதத்தில் சட்டரீதியான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வையை செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில், இரண்டாம் பிரதிக்கு முத்திரைத் தீர்வையை செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை அல்லது குறித்த நொத்தாரிசினால் சத்தியப் பிரதியென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உரிய பற்றுச்சீட்டின் நகழ் பிரதி ஒன்றினையும் ஆவணத்தினை பதிவு செய்வதற்காக ஒப்படைக்கும் பொழுது மூலப் பிரதியுடன் இணைத்து பொறுப்பேற்றல்.


දුරකථන අංකය / தொலைபேசி இல. / Telephone No. 2889488 2889489
ෆැක්ස් අංකය / தொலைநகல் / Fax No. 2889491
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website www.rgd.gov.lk
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail rgd@sltnet.lk rg@rgd.gov.lk

b) உரிய முத்திரை தீர்வைக்காக இரண்டாம் பிரதிக்கு முத்திரைகள் ஒட்டப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அந்த இரண்டாம் பிரதியின், நகழ் ஒன்று நொத்தாரிசினால் சத்தியப் பிரதி என அத்தாட்சிப்படுத்தப்பட்டு அது மூலப் பிரதியுடன் பதிவிற்காக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

05. மேற் குறிப்பிட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாத ஆவணங்கள் தொடர்பாக ஆவண பதிவு கட்டளைச் சட்டத்தின் 36 (2) பிரிவிற்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மேலும் அறியத்தருகின்றேன்.

பீ.எஸ்.பீ.அபேவர்தண

பதிவாளர் நாயகம்.

பிரதிகள் :

| | | |
|---|---|---|
| 01. மேலதிக பதிவாளர் நாயகம் | - | தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைகளுக்காகவும் |
| 02. பிரதான கணக்காளர் | - | |
| 03. பிரதான உள்ளக கணக்காய்வாளர் | - | |
| 04. சகல வலய பொறுப்பு பிரதி / உதவி பதிவாளர் நாயகங்கள் | - | |
| 05. சகல மாவட்ட பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்கள் | - | |
| 06. தலைமை அலுவலகத்தின் சகல பதவி நிலை உத்தியோகத்தர்கள் | - | |
| 07. செயலாளர், இலங்கை சட்டதரணிகள் சங்கம் | - | உறுப்பினர்களை அறிவூட்டுவதற்கு |